### இன்றைய சூழ்நிலையில்

# தி.மு.க.வை எதிர்க்க வலிமையான போட்டியாளர்கள் யாரும் இல்லை!

## காளையார்கோவிலில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

சிவகங்கை, மார்ச் 24-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் 'தமிழ் நாடு தலை குனியாது' என்ற தலைப்பில் பரப்புரை நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். அந்த கூட்டத்திற்கு பின் காளையார் கோவிலில் செய்தியாளர்களிடம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கூறியதாவது:-



இன்றைய சூழ்நிலையில் தி.மு.க.வை எதிர்க்க தகுதியான வலிமையான வேட்பாளர்கள் யாரும் தமிழகத்தில் இல்லை .கடந்த ஐந்து ஆண்டுகளாக முதல்வர் மு. க ஸ்டாலின் சிறப்பாக மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி அதை செயல்படுத்தி உள்ளார். இந்த திட்டங்களில் பயன் நேரடியாக மக்களிடம் சென்று உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மீண்டும் மு .க .ஸ்டாலின் இரண்டாவது முறையாக முதல்வராவது உறுதியாகிவிட்டது .

இன்றைய அரசியல் சூழலில் தி.மு.க.விற்கு எதிரான வலிமையான போட்டியாளர்கள் யாரும் இல்லை. பா.ஜ.க. பெயரளவில் தான் உள்ளது. புதிய கட்சி தொடங்கியுள்ள சசிகலா, பா.ம.க நிறுவனர் ராமதாஸ் உடன் கூட்டணி வைத்துள்ளார். அவர் அரசியலுக்கு புதியவர். ஜெயலலிதா உடன் பயணித்தவர். இந்த தேர்தலில் மக்கள் தரும் தீர்ப்பினை வைத்து அவருடைய அரசியல் எதிர்காலம் அமையும்.

எடப்பாடி ஒரு சுயநலவாதி. அரசியல்வாதி என்பவர் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்பவராக திகழ வேண்டும். கட்சி தொண்டர்கள் நிர்வாகிகளை அரவணைத்துச் செல்வதாக இருக்க வேண்டும்.எடப்பாடியிடம் இது ஏதும் இல்லை. இவரால் அதி.மு.க. படுகுழிக்குச் சென்று விட்டது .தமிழகத்தில் அ.தி.மு.க தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தலைமை என்று கூறி வருகிறார்கள். ஆனால் எதற்கெடுத்தாலும் அவர்கள் டெல்லியில் சென்று பா.ஜ.க. தலைவர்களை சந்தித்து ஆலோசனை பெற்று வருகிறார்கள். அ.தி.மு.கவை எங்கு எடப்பாடி அடகு வைத்துள்ளார் என்பது கட்சி தொண்டர்களுக்கு நன்றாக தெரிகிறது .. இவர்களது செயல்பாட்டை மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் வரும் தேர்தலில் அ.தி.மு.கவிற்கு தகுந்த பாடத்தினை தருவார்கள்.

த.வெ.க.தலைவர் விஜய் தி.மு.க.வை அரசியல் எதிரி என்று கூறுகிறார். ஆனால் அதற்கான காரணத்தை அவர் கூற வேண்டும். அவர் அரசியலுக்கு புதியவர். அவர் கூறுவதை மக்கள் ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. நான் செல்லும் இடங்களில் தி.மு.க.வினருக்கு மக்கள் வாக்களிக்க தயாராகி விட்டார்கள் என்பது தெரிய வருகிறது.

இன்றைய நிலையில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் இயக்கமாக ஒரு தலைவராக மு.க. ஸ்டாலினும் தி.மு.க.வும் விளங்குவதால் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராவது உறுதி.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறினார் .

பேட்டியின் போது மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஒன்றிய செயலாளர்கள் யோக.கிருஸ்ணகுமார்,வே.ஆரோக்கியசாமி, ஆர்.எம்.கென்னடி, ஆகியோர் உடன் இருந்தார்கள்.

---

### ஒற்றுமையைச் சிதைக்க அனுமதிக்கமாட்டோம்!

# பிரதமர் மோடிதான் மிகப்பெரிய ஊடுருவல்காரர்!

## மேற்குவங்க முதல்வர் மம்தா ஆவேசம்!

கொல்கத்தா, மார்ச் 24-

பிரதமர் மோடி தான் மிகப் பெரிய ஊடுருவல்காரர் என்று மேற்குவங்க முதல்வர் மம்தா ஆவேசமாக தெரிவித்தார்.

ரமலான் பண்டிகையை முன்னிட்டு கொல்கத்தாவின் புகழ்பெற்ற 'ரெட் ரோடு' பகுதியில் நடைபெற்ற ஈத் தொழுகைக்குப் பிறகு, அங்கு கூடியிருந்த இஸ்லாமிய மக்களிடையே முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது:

பிரதமர் மோடியும், பாஜவும் உங்கள் வாக்குரிமையைப் பறிக்க அனுமதிக்க மாட்டோம். இறுதி வரை போராடுவோம். எஸ்.ஐ.ஆர். பணிகளை எதிர்த்து நீதிமன்றங்களை அணுகியுள்ளோம். நீங்கள் (பிரதமர் மோடி) வெளி நாடுகளுக்குச் செல்லும் போது, அங்குள்ள தலைவர்களுடன் கைகுலுக்கி நட்பு குறித்துப் பேசுகிறீர்கள். அது உங்கள் விருப்பம்; நான் அனைத்து நாடுகளையும் மதிக்கிறேன்.



ஆனால், நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிய தும், திடீரென்று 'இந்துமுஸ்லிம்' என்ற பிரிவினைவாதப் பேச்சு தொடங்குகிறது; மக்கள் 'ஊடுருவல்கா ரர்கள்' என்று அழைக்கப் படுகிறார்கள். அதன்பின், மக்களின் பெயர்களை நீக்குமாறும், அவர்களை 'ஊடுருவல்காரார்கள்' என்று முத்திரை குத்துமாறும் நீங்கள் கோருகிறீர்கள். ஆனால் நான் சொல்கிறேன், நீங்களே (மோடி) மிகப் பெரிய ஊடுருவல்காரர்தான்.

எங்கள் அரசாங்கத்தைக் கைப் பற்றி, ஒரு அதிகாரப்பூர்வமற்ற ஜனாதிபதி ஆட்சியைத் திணித்துள்ளீர்கள். ஆனால் நாங்கள் அஞ்சமாட்டோம். அனைத்து சமூக மக்களுடன் நான் நட்புறவுடன் இருக்கிறேன். எனவே வேறு யாரும் உங்களுக்குத்துணையாக நிற்கா விட்டாலும், மதங்கள், சாதிகள் மற்றும் நம்பிக்கைகளைக் கடந்து, மேற்குவங்க மக்களாகிய உங்கள் குடும்பத்தின் ஒரு உறுப்பினராக, நான் உங் களுக்குத் துணையாக நிற்பேன்.

மேற்குவங்கத்தை குறிவைத்தும், மக்களைப் பிளவுபடுத்தவும் முயன்று வருபவர்கள் நரகத்திற்குச் செல்லட்டும். இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் என அனைவரும் மேற்குவங்கத்தில் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த ஒற்றுமையைச் சிதைக்க யாரையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பா.ஜ.வை அகற்றுவோம்; தேசத்தைக் காப்போம்.

இவ்வாறு மம்தா பானர்ஜி அவர்கள் கூறினார்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# 'திராவிட மாடல்' ஆட்சி தமிழ்நாட்டில் மீண்டும் அமைய தீவிரப் பணியாற்றுவோம்!

## நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, மார்ச். 24-*

*தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் பணியாளர்களுக்கு 10% முதல் 22% சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டி தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம் அவர்களின் அறிவுறுத்தலின்படி நேற்று முன்தினம் (21.03.2026 - சனிக்கிழமை) காலை தொ.மு.ச. பேரவை அலுவலகமான கலைஞரகத்தில், மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையிலும், மாநிலப் பொருளாளர் இரா.பழனி யப்பன் துணைத் தலைவர் மரு. இரா. இராஜன் ஆகியோர் முன்னிலை யிலும் நடைபெற்றது.*




*தொ.மு.ச. பேரவை தலைவர் கி. நடராஜன், பொருளாளர் கோ.சி. வள்ளுவன் துணைத்தலைவர் இரா.பொன்னுராம் மற்றும் உழைப்பாளி ஆசிரியர் அருணகிரி , ஏனைய நிர்வாகிகளும் சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இக் கூட்டத்தில் பண்டக சாலை தொ.மு.ச. நிர்வாகிகள் டி.யு.சி.எஸ். - இராஜன், சாமிநாதன், காஞ்சி பண்டக சாலை -எம். ஜானகிராமன், சிந்தாமணி (சென்னை) - எம். பிரிட்டா, செங்கல்பட்டு - கார்த்திக்குமார், திருவள்ளூர் - ஜோதி, திருவண்ணாமலை - பாண்டியன், வேலூர் - பாபு, சேலம் - சதீஷ்குமார், தர்மபுரி - சிங்காரவேல், திருச்சி - (சிந்தாமணி) - ராஜேந்திரன், மதுரை - மணி, திருநெல்வேலி - அய்யப்பன்,சிவகங்கை - நாகராஜன், திருவாரூர் - காளிதாஸ், தஞ்சாவூர் - விசுவநாதன், கும்பகோணம் சந்திர சேகரபுரம்) - கார்த்திக், பொள்ளாச்சி- எம். ராகவன் மற்றும் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் அச் சங்கத்தின் பொதுச்செயலாளர் டி.யு.சி.எஸ்.சு.பத்மநாபன் நன்றி கூறினார்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-*

*முதலமைச்சர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உலக நாடுகளெல்லாம் தமிழ் நாட்டு செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வண்ணம் நடப்பதுடன், பாராட்டுகளை பெற்று நல்லாட்சி நடத்தும் அவர்கள் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 10% முதல் 22%சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கியமைக்கு சிரம் தாழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.*

*நு.கூ.மொ.வி.பண்டக சாலைகள் ஊழியர்களின் ஊதிய உயர்வுகோரிக்கைகளை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்அவர்களிடம் நேரில் வழங்கியும், கோரிக்கை நிறைவேறும் வரை எங்களை தினமும் ஊக்கப்படுத்தியும் நல்ல தொரு ஊதிய உயர்வை பெற்றுத்தந்த தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் தலைவர் கி.நடராசன் பொருளாளர் கோ.சி.வள்ளுவன், துணைத்தலைவர் இரா. பொன்னுராம் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள் கிறோம்.*

*23.04.2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தொடர வெற்றிக்கு முழுமூச்சாக பாடுபடுவோம் என்பதை முழுமனதோடு தெரிவித்துக்கொள்கிறோம்.*

*வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஒவ்வொரு தொகுதிகளிலும் திராவிட மாடல் நாயகன், தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர், தலைவர், பொருளாளர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு பணியாற்றுவோம். என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்ட 3% அகவிலைப்படியை அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் 58%வழங்க வேண்டி மீண்டும் வலியுறுத்தி பெறுவோம்.*

*ஊதிய உயர்வு ஆணையில் காணப்படும் ஒரு சில நிபந்தனைகளை தளர்த்தக்கோரி பதிவாளர் அவர்களிடம் முறையிட்டு திருத்தம் கோரப்படும்.*

*பணி வரன்முறைப் படுத்தவும்,நிரந்தரப்படுத்தாமல் ஒரு சில சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரப் படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*

*அரசின் பல்வேறு நலத் திட்டங்களை பல்வேறு சிரமங்களுக்கிடையேயும் அன்றாடம் கொண்டு சேர்க்கும்கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் தமிழ் நாடு அரசின் மூலம் ஓய்வூதியம் வழங்கவேண்டி தொ.மு.ச. பேரவை மூலம் அரசாங்கத்தை வலியுறுத்தி பெற்று தர வேண்டி கேட்டுக்கொள் கிறோம்.*


*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*




கோவை வடக்கு மாவட்டம், சர்க்கார் சாமகுளம் ஒன்றியம், கள்ளிபாளையம் ஊராட்சி அ.தி.மு.க. நிர்வாகிகள் வாசுதேவன், கனகராஜ், வினோத்குமார் ஆகியோர் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் சுரேஷ்குமார், பழனிச்சாமி உள்ளனர்.

---

# முதல்வரின் தீர்க்கதரிசனம்!




தமிழக வாக்காளர்களே… புரிகிறதா சூட்சமம்? 2026 தேர்தல் கழகத்துக்கும் டெல்லிக்குமானதே… என அன்றே அடித்துச் சொன்னவர் நமது முதல்வர். முரட்டு அடிமை இதை மூர்க்கத்தனமாக எதிர்த்து பேசினார். மக்கள் குழம்பி போனார்கள். ஆனால் நேற்று முரட்டு அடிமை டெல்லிக்கு போய்… பல மணி நேரம் காத்திருந்து…. தங்களின் அமித்ஷா முன்னேற்றக் கழகத்தின் தலைவரை சந்தித்து பல கட்டளைகளை பெற்று வந்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து கூட்டணித் தலைவர்களும் அங்கே போய் சனாதனத் தலைவரின் விஸ்வரூப தரிசனம் கண்டு…. தங்களுக்கான கட்டளைகளை பெற்று வந்துள்ளனர்.

தமிழர்களே… சூட்சமம்? குறுக்கு வழியிலே.. முரட்டு அடிமை கூட்டணி மூலம் வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்து…. தமிழ் நாட்டில் அமித்ஷா முன்னேற்றக் கழகம் ஆள நினைக்கிறது. தமிழக மக்கள் என்ன முட்டாள்களா? கண்ணை மூடிய பூனைகளா? அப்படி இருந்திருந்தால் கடந்து போன அத்தனை தேர்தல்களிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு தொடர் வெற்றிகளை பரிசளித்திருப்பார்களா?…….

அண்ணாவின் தம்பிகள் தெளிவானவர்கள்… கலைஞரின் உடன்பிறப்புகள் உண்மையானவர்கள்…. புரட்சி நடிகரின் ரத்தத்தின் ரத்தங்கள் விசுவாசமானவர்கள். ஸ்டாலினின் தொண்டர்கள் பகுத்தறிவுவாதிகள். எந்த ரூபத்தில் எதிரி நுழைந்தாலும் எல்லையிலேயே தடுத்து நிறுத்தி… திருப்பி விரட்டி விடும் வல்லமை படைத்தவர்கள். வேண்டுமென்றால் வந்து பார்… அப்போது தான் தெரியும் நீ யார் - நான் யார் என்று? பதவிக்காக உழைப்பவன் நீ! தமிழக மக்களுக்காக உழைப்பவர் நான்! மதநீதி சொல்பவன் நீ! சமநீதி காண்பவன் நான்!! முதல் மரியாதை கேட்பவன் நீ! அனைவருக்கும் சுயமரியாதை கேட்பவன் நான்! கொள்ளையடித்து… கொள்கை அற்று… ஜாதி வளர்க்கும் கூட்டத்தோடு நீ! அண்ணா சொன்ன வழியிலே கடமை கண்ணியம் கட்டுப்பாட்டோடு நான்!..

. உரிமைகளைப் பறித்து ஒரே நாடு காண நினைப்பவன் நீ! உறவுக்கு கை கொடுத்து உரிமைக்கு குரல் கொடுத்து மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி காண நினைப்பவன் நான்! ஒற்றை மதத்தில் உன் ஆட்சி! சர்வ மதங்களோடும் சமதர்மவாதிகளுடன் என் ஆட்சி! தேர்தல் மூலம் நீ கேட்பது சர்வாதிகாரம்! நான் கேட்பது ஜனநாயகம் காக்கும் உரிமை! கார்ப்பரேட்டுகளின் கணக்கில் வராத கோடிகளுக்கு காவலர் நீ! உழைத்துக் களைத்து ஊதியம் பெற முடியாத ஏழைகளின் உரிமை காப்பவன் நான்! வந்தேறிகளை வாழவைத்துக் கொண்டிருப்பவன் நீ! சொந்த நாட்டுக்காரன் குடிசைகளுக்கு இதுவரை வராத சுதந்திர வெளிச்சத்தை கொண்டு சேர்க்க போராடுகிறவன் நான்!……. உளுத்துப் போன மூங்கில் பந்தலுக்கு உதவாது பாடைக்கும் உதவாது! அதே நிலை தான் உன் சனாதன சன்மார்க்க அரசியல்! என் திராவிட மாடல்.. ஏழைக்கானது… இல்லாதவனுக்கானது.. உழைப்பவனுக்கானது…. சமநீதிக்கானது… பெண் உரிமைக்கானது.. இந்திய மக்களுக்கானது! இன்னும் சிந்திப்போம்…



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்

---

# கரூர் மாநகர பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை!

கரூர், மார்ச் 24-

கரூர் சட்டமன்றத் தொகுதி கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிக் கழகங்களின் செயல்வீரர்கள் கூட்டம் பகுதி வாரியாக நடைபெற்றது. இதில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்கள் சாதனைகளை கூறி கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கி உள்ள மகத்தான கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பை தேடித் தருமாறு கேட்கும் வகையில் செயல் வீரர்கள் கூட்டங்களை நடத்தி வருகிறோம். எதிர் முகாமில் இருக்கின்றவர்கள் மக்களை சந்திக்கும்போது, அவர்கள் செய்த சாதனைகளை சொல்லி வாக்குச் சேகரிக்க இயலாதவர்கள் தனிப்பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி காரணமாக தனிப்பட்ட விமர்சனங்களை ஒருமையில் பேசுவது போன்ற மோசமான மட்ட ரகமான அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசு நிறைவேற்றிய திட்டங்களை மக்களிடம் சொல்லி வாக்குகளை சேகரிப்பது, அடுத்த அரசு அமைந்த உடன் கரூர் மாவட்டத்திற்கு என்னென்ன திட்டங்களை கொண்டு வருவோம் என வாக்குகளை சேகரிப்பது போன்ற பணிகளை நாங்கள் முன்னெடுத்திருக்கிறோம். கரூர் மாவட்டத்தில் 2021 தேர்தலில் எப்படி நான்கு தொகுதியிலும் உதயசூரியன் சின்னத்தை மக்கள் ஆதரித்தார்களோ அதே போல் 2026 தேர்தலிலும் மகத்தான வெற்றியை தேடி தருவார்கள்.

**மக்கள் செல்வாக்கு இல்லை அவதூறு பரப்புகிறார்கள்!**

மாவட்டத்திற்கு ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். புகைப்படத்துடன் புத்தகம் வைத்திருக்கிறேன். ஒவ்வொரு அரசியல் கட்சியும் பணிமனை அமைக்கிறார்கள். அனுமதி பெற்று இதனை அமைத்து வருகிறோம். ஆனால் அவர்களுக்கோ அலுவலகத்தில் உட்கார ஆளில்லை. தேர்தல் களத்தில் வேலை செய்ய ஆளில்லை. கண்கூடாக நீங்கள் பார்க்கிறீர்கள். மக்கள் செல்வாக்கு இல்லை. அந்த இயலாமையை மறைப்பதற்காக, குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காக, சொல்லுகிறார்கள். நாங்கள் 9 இடங்களில் அலுவலகம் அமைக்கிறோம் அதற்கான அனுமதிகளை பெற்று வருகிறோம். இதனை தவறாக கூறுகிறார்கள். நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒருவர் சொல்வதை அப்படியே இங்கு வந்து கேள்வி கேட்கிறீர்கள். பூத் கமிட்டி கூட்டம், தேர்தல் பணி இவற்றிற்காக இந்த அலுவலகம் அமைக்கப் படுகிறது.

இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் அவர்கள் தான் ஆட்சி அமைப்பார்கள். 200க்கும் மேற்பட்ட இடங்களில் கழக கூட்டணி வெற்றி பெறும். கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெறும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட கூட்டணி அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி. தமிழ்நாடு அணிக்கும், டெல்லி அணிக்கும் நடைபெறுகிற போட்டி என தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான்கு தொகுதிகளிலும் மிகவும் குறைவான வாக்குகளைப் பெற்று மோசமான தோல்வி அடையபோவது அ.தி.மு.க. தான். நாங்கள் சொல்வது போல் இந்த திட்டங்களை நிறைவேற்றி னோம் என அ.தி.மு.க.வினர் கூற முடியவில்லை. அதனால் மக்கள் முகம் சுழிக்க கூடிய அரசியல் செய்கிறார்கள்.

**வெல்லப்போவது தமிழ்நாடு அணிதான்!**

எங்கள் தலைவர் அமைத்திருப்பது தமிழ்நாடு அணி. அவர்கள் டெல்லி அணி. வெல்லப்போவது தமிழ்நாடு அணிதான். அவர்களுக்கு தலைமை அலுவலகம் டெல்லியில் இருக்கிறது. அதன் கிளை தான் தமிழ்நாட்டில் இருக்கிறது. டெல்லி சொல்வதை தான் கேட்டாக வேண்டும் என்கிற சூழல். பா.ஜ.க.விடம் கட்சியை அடகு வைத்து விட்டனர். இனி மீட்கவே முடியாது என்கிற சூழலில் இருப்பது தான் அ.தி.மு.க.வின் நிலைமை.

வெண்ணைமலை கோவில் இடம் அல்ல மக்களுக்குச் சொந்தமான இடம். நாங்கள் வந்தால் அதை மக்களிடம் கொடுத்து விடுவோம் என்று முதலில் கூறி விட்டு, இப்போது கோவில் நிலம் என்று மனு கொடுக்கிறார்கள். ரொம்ப முத்தி போய் விட்டால் என்ன பேசுகிறோம் என்பதே தெரியாது. இப்போதே அவர்கள் கண்ணில் தோல்வி பயம் தெரிகிறது. என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் ஆணையம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு அரசியல் நோக்கம் கற்பிக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதி, சூலூர் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட கரவளி மாதப்பூர், இராசிபாளையம், காடுவெட்டி பாளைய ஆகிய ஊராட்சிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஆலோசனைக் கூட்டம் சூலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சிபி.கே.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.